Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 104

வெள்ளிக்கிழமை 10 மார்ச் 2023

மாசி 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

விலை ரூ. 50

பக்கங்கள் 12

## கீரிமலை ஆதிசிவன் ஆலயம் அழிப்பா?

யாழ்ப்பாணம், மார்ச் 10
கீரிமலை ஆதிசிவன் ஆலயம், சடையம்மா மடம், கதிரைவேலவன் ஆலயம் ஆகியவற்றின் நிலை என்ன? என்று கேள்வி எழுப்பியுள்ளார் »11

## 35 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளநோட்டுடன் ஒருவர் கைது

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, மார்ச் 10
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 35 லட்சம் ரூபா பெறுமதியான (கள்ளநோட்டுப் பெறுதி) கள்ளநோட்டுக்களுடன் ஒருவர் »11

## ரூபா மீண்டும் வலுவிழக்கும்

கொழும்பு, மார்ச் 10
அமெரிக்க டொலருக்கு எதிராக குறிப்பிடத்தக்க வகையில் வலுவடைந்து வரும் ரூபாவின் மதிப்பு, இந்த ஆண்டு இறுதியில் மீண்டும் வலுவிழக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. »11



## கொடிகாமம் பகுதியில் 16 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 10
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் வடக்குப் பகுதியில் நேற்றையதினம் 16 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. »10

# நம்பகத்தன்மைக்கு தேர்தல் அவசியம்!

### ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு இடித்துரைப்பு

கொழும்பு, மார்ச் 10
இலங்கையில் சட்டத்தின் ஆட்சியும், சுயாதீன நிறுவனங்களின் செயற்பாடும் உறுதிப்படுத்தப்படவேண்டும். இது தேர்தல் கட்டமைப்பையும் குறிக்கின்றது. அப்போதுதான் இலங்கை தொடர்பில் நம்பிக்கையைப் பேணமுடியும் – என்று இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. »11




## பணம், அலைபேசி கோப்பாயில் அபேஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 10
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு வீடு புகுந்து 40 ஆயிரம் ரூபா பணமும், »10

## 36 பவுண் நகைகள் கரவெட்டியில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 10
கரவெட்டி மத்தி சம்மந்தர் கடையடிப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 36 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன »10

### சர்வதேச நாணய நிதியத்திடம்

## கால்களை நக்கித்தான் கடன்பெறுகிறது அரசு!

### சஜித் ஆவேசம்



கொழும்பு, மார்ச் 10
சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறு சரியான முறையில் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபடவேண்டும் என்பது இந்த அரசாங்கத்துக்குத் »11

## தேர்தல் பணிகளை ஆரம்பிக்க உத்தரவு இன்னும் வரவில்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 10
உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தபோதும் தேர்தல்கள் தொடர்பான »11

## தேர்தல் வர்த்தமானி நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 10
உள்ளூராட்சித் தேர்தல் திகதி தொடர்பான வர்த்தமானி நேற்றையதினம் வெளியிடப்பட்டுள்ளது. »11

### தமிழரசில் இருந்து

## கட்சிதாவியோரை நீக்க நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 10
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராக உள்ளபோதும் பிற கட்சிகளின் வேட்புமனுவில் போட்டியிடும் 16 பேரை ஏன் »10

## வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு நிதி, பொலிஸ் பாதுகாப்பு!

### அரச அச்சகர் கோரிக்கைக் கடிதம்

கொழும்பு, மார்ச் 10
வாக்குச்சீட்டு அச்சிடும் பணியை ஆரம்பிப்பதற்காகத் தேவையான நிதி மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை வழங்குமாறு கோரி நிதி »10


வடக்கின் பெரும்போர்

## யாழ். மத்திய கல்லூரி வலுவான நிலையில்!

யாழ்ப்பாணம், மார்ச் 10
'வடக்கின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் இடையிலான »11

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்., மார்ச் 10
யாழ்ப்பாணம், நிலாவரைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். சுப்பையா இரத்தினசிங்கம் »10

### பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

## வடக்குப் பல்கலைகளில் ஊழியர்கள் நேற்றுப் போர்

யாழ்ப்பாணம், மார்ச் 10
அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்படவேண்டும், வரிக்கொள்கை நீக்கப்படவேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, »10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்திய ரூபாவில் வர்த்தகம் பொருளாதார ஆதிக்கமாக அமையலாம்

## பேராசிரியர் விஜயகுமார் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 10**

**இந்தியாவிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யும்போது இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதானது எதிர்காலத்தில் இலங்கை மீதான இந்தியாவின் பொருளாதார ஆதிக்கமாக மாறலாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறைப் பேராசிரியர் எஸ்.விஜயகுமார் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஆசியாவில் மிகப் பெரிய பொருளாதாரம் இந்தியாவினுடையது. அதற்கு அருகில் மிகக் குறுகிய பொருளாதாரத்துடன் இலங்கை இருக்கின்றது. இந்திய ரூபாவில் இலங்கை கொடுக்கல் - வாங்கல்களை மேற்கொள்வதற்கான தேவையை பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை இந்தியாவின் மத்தியவங்கியுடன் 5 கொடுக்கல் - வாங்கல் கணக்குகளை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் டொலர் திரவத்தன்மை குறைவாக இருப்பதால், இத்தகைய கொடுக்கல் - வாங்கல் சிறப்பானதாக அமையும்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி மூலம் கிடைக்கின்ற வருவாய் 912 மில்லியன் டொலர். ஆனால் இந்தியா, இலங்கைக்கு தனது பொருள்களை இறக்குமதி செய்வதன் ஊடாக 4.5 பில்லியன் அமெரிக்க டொலரை ஈட்டுகின்றது. இந்தியாவின் மிகப்பெரிய இறக்குமதிப் பங்காளியாக இலங்கை இருக்கின்றது. இவ்வாறான சூழலில் டொலருக்குப் பதிலாக இந்திய ரூபாவிலான கொடுக்கல் வாங்கல் என்பது இலங்கைக்கு சிறந்த ஒன்றாக இருக்கின்றது.

இலங்கை மற்றும் இந்திய ரூபாய்களின் உறுதிப்பாடு என்பது இந்தக் கொடுக்கல் வாங்கலில் முக்கியமானது. இலங்கை ரூபா உறுதியாக இருந்தால் மாத்திரமே இந்திய ரூபாவிலான கொடுக்கல் வாங்கல் இலங்கைக்குச் சாதகமாக அமையும். இலங்கையிலுள்ள இறக்குமதியாளர் இந்திய ரூபாவில் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் இந்திய ஏற்றுமதியாளரைத் தெரிவுசெய்யவேண்டும். அப்போதுதான் இந்தக் கொடுக்கல் - வாங்கல் சரியாக அமையும்.

இந்திய ரூபாவில் இலங்கையின் பொருளாதாரம் செயற்படும்போது இந்தியாவின் மறைமுக ஆதிக்கம் இலங்கையில் உருவாகும். பொருளாதார ஆதிக்கத்துக்கு அது வழிவகுக்கும். மேலும் இந்திய ரூபாவுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.


ஏற்கனவே இந்தியா தனது இந்திய ரூபாவிலான கொடுக்கல் - வாங்கல்களை ரஷ்யா, நேபாளம் ஆகியவற்றுடன் செய்து வருகின்றது.

இதற்கு அப்பால் சிக்கலான விடயம் இருக்கின்றது. உலகளவில் அமெரிக்க டொலர்தான் கொடுக்கல் - வாங்கல்களுக்கான ஒரே அலகாக இருக்கின்றது. இந்திய ரூபாவிலான கொடுக்கல் - வாங்கலை அமெரிக்கா எவ்வளவு தூரத்துக்கு ரசிக்கும் என்பது தெரியவில்லை. இது சிலவேளைகளில் இலங்கைக்கு வேறு வகையிலான தாக்கத்தை ஏற்படுத்தலாம் - என்றார். (ஒ-125)

---

ரூபா பெறுமதியுயர்வு

## வெள்ளைச் சீனி, பருப்பு விலைகள் குறைந்தன



கொழும்பு, மார்ச் 10

சில அத்தியாவசிய உணவுப் பொருள்களின் மொத்த விலைகள் குறைந்துள்ளன என புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றதனால் அவற்றின் மொத்த விலை குறைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வெள்ளைச்சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பருப்பு கிலோ மொத்த விலை 30 ரூபாவாலும் வெள்ளைச் சீனி கிலோ ஒன்றின் மொத்த விலை 40 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளன.

மொத்த விலை குறைவடைந்ததனால் எதிர்வரும் நாள்களில் இவற்றின் சில்லறை விலைகளும் குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-இ)

---

## இறக்குமதி முட்டை இராணுவத்தினருக்கு!

### வர்த்தக அமைச்சர் மறுப்பு

கொழும்பு, மார்ச் 10

இன்றுவரை ஒரு முட்டை கூட நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படவில்லை. ஆயினும் முட்டை இறக்குமதி செய்யப்பட்டு அந்த முட்டைகள் இராணுவத்தினரின் உணவுத் தேவைக்கு வழங்கப்பட்டன என செய்தி வெளியாகியுள்ளது. இந்தச் செய்தி முற்றிலும் அடிப்படையற்றது- உண்மைக்குப் புறம்பானது.

இவ்வாறு வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர்மேலும்குறிப்பிட்டதாவது: நாட்டில் முட்டையின் விலையுயர்வைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதிசெய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

எதிர்வரும் பண்டிகைக் காலம் முடிவடையும் வரை பலகட்டங்களாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆயினும் புதுடில்லியிலுள்ள கால்நடைப் பிரிவு ஊடாக கிடைக்க வேண்டிய அறிக்கை கிடைக்கப்பெறாமையால் முட்டை இறக்குமதியில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஒரு முட்டை கூட இறக்குமதி செய்யப்படாத நிலையில் இந்தியாவிலிருந்து 24 லட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டு இராணுவத்தினரின் உணவுத் தேவைக்கு வழங்கப்பட்டுள்ளன என செய்தி வெளியாகியுள்ளது.

இந்தச் செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்புக்கு அறிவுறுத்தியுள்ளேன் - என்றார். (ச-இ)

---

## சட்டவிரோத மணலகழ்வு; வளலாயில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 10

அச்சுவேலி பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட வளலாய் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு இடம்பெறுகின்றது என காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது.

அகழ்வுக்குப் பயன்படுத்திய டிப்பர் வாகனம் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டன. (ச-23)

---

## நெருக்கடியில் இருந்து மீள சீனா இலங்கைக்கு ஆதரவு

கொழும்பு, மார்ச் 10

இலங்கை கடன் நெருக்கடியிலிருந்து விடுபட உதவுவதில் 'சாதகமான பங்கை' வகிப்போம் என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சீன ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்புக்காக எழுத்து மூல உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் சீனா இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. இலங்கையின் தற்போதைய சவால்களை சமாளிக்கவும், கடன் சுமையை எளிதாக்கவும், நிலையான வளர்ச்சியை அடையவும் உதவுவதில் சாதகமான பங்கை வகிக்க, தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தரப்புடன் கடனை அகற்றும் திட்டங்களை விரிவாக விவாதிப்பதுடன் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சீனா ஆதரவளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

---

## இறக்குமதி உ.கிழக்கு பண்டவரி அதிகரிப்பு


கொழும்பு, மார்ச் 10

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழக்கு மீதான விசேட பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த வரி நேற்றுமுன்தினம் முதல் எதிர்வரும் 6 மாதங்களுக்கு நடைமுறையாகும் வகையில் 30 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என நிதியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு கிலோ ஒன்றின் மீது 50 ரூபா விசேட பண்டவரி விதிக்கப்படும் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

---

## போதிய விளைச்சலில்லை அன்னாசி விலை உயர்வு!



கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் அன்னாசிப் பழங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அவற்றின் விலையும் உயர்வடைந்துள்ளது என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை அன்னாசி விளைச்சல் அதிகளவில் இல்லை. அன்னாசி பயிர்ச்செய்கைக்கு போதியளவு பசளை கிடைக்காமையால் விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைமையில் ஹெரோய்ன் உடுவிலில் இருவர் கைது!

சுன்னாகம், மார்ச் 10

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 40 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது உடுவில் மல்வம் பகுதியில் 20 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோயினுடன் 36 வயதான ஒருவரும் உடுவில் பகுதியில் 20 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோயினுடன் 22 வயதான பிறிதொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# ஊரி அகழ்வதற்கான இடங்கள் வேலணைப் பிரதேசத்தில் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 10

வேலணைப் பிரதேசத்தில் ஊரி அகழ்வுக்குப் பொருத்தமான இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் துறைசார் அதிகாரிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றதன் பின்னர் இடம்பெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் வேலணைப் பிரதேசசபையின் உள்ளக வீதி புனரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ஊரியின் தேவை காணப்பட்டது. ஆயினும் அதனை அகழ்வதற்கான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதற்கான அனுமதியை கடந்த காலங்களில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு வழங்கவில்லை.

இந்தநிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் முன்னாயத்தக் கூட்டத்தில் ஊரி போதியளவு இன்மையால் பல அபிவிருத்தித் திட்டங்கள் கிடப்பில் உள்ளன என வேலணைப் பிரதேசசபையின் செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையானளவு ஊரியை அகழ்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். அறிவுறுத்தலுக்கமைய துறைசார் அதிகாரிகள் புங்குடுதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு உள்ளிட்ட பிரதேசங்களுக்கு களப்பயணம் மேற்கொண்டு ஊரி பெறுவதற்கு சாதகமான தன்மைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டனர். (ச)

# புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குங்கள்

## நாடுகடந்த அரசாங்கம் இந்தியாவில் மனு

**சென்னை, மார்ச் 10**

**இந்தியாவில் சட்டவிரோத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை நீக்கவேண்டும் என்று கோரி மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதானி உருத்ரகுமாரன், இது தொடர்பிலான விண்ணப்ப கடிதத்தை இந்திய உள்துறை அமைச்சுக்கு அனுப்பியுள்ளார். இந்தக் கடிதம் கடந்த மார்ச் 8 ஆம் திகதியன்று அனுப்பப்பட்டுள்ளது. அதில் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏன் இந்தியாவின் தடைப் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்பதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டு முதல் இந்த கோரிக்கையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ளது என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக, இலங்கை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பணியாற்றுவதில் சாத்தியமற்ற நிலை ஏற்பட்டுள்ளது என்று இந்த விண்ணப்பக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைக்கான காரணமாக, பிராந்தியத்துக்கும் இந்தியாவின் ஒருங்கிணைப்புக்கும் அச்சுறுத்தல் என்ற விடயத்தை இந்தியா, வலியுறுத்தி வருகின்றபோதும், அதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமது மனுவில் மறுத்துள்ளது.

இந்தநிலையில் தமிழ்மக்களின் அபிலாஷைகளை முன்னெடுக்க இந்தியாவின் ராஜதந்திர உதவி அவசியம் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் கோரப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை, இந்திய மக்களின் ஒருமைப்பாட்டையும், பிராந்தியப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகிறது. தமிழீழம் இந்தியாவுடன் சிறப்பான உறவைக் கொண்டிருக்கும் என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# சட்டவிரோத மரக்குற்றிகளுடன் மரக்காலை உரிமையாளர் கைது

நவாலிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மரக்குற்றிகளை வைத்திருந்த மரக்காலை உரிமையாளர் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய யாழ்.மாவட்ட விசேட அதிரடிப் படையினருடன் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் போது இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மரக்காலை உரிமையாளரிடமிருந்து 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான வேப்ப மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வனவளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ச-125)

# கடற் கொள்ளையர்களால் 1000 கிலோ மீன் கொள்ளை

கொழும்பு, மார்ச் 10

வெலிகம, பத்தேவத்த மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது 20 பேர் கொண்ட கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதுடன், மிரிஸ்ஸ கடலில் வைத்து அவர்களது ஆயிரம் கிலோ மீன்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று வெலிகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரண்டு படகுகளில் வந்த கடற்கொள்ளையர் குழுவொன்றே கடற்கரையிலிருந்து கடலின் சுமார் 6 மைல் தொலைவில் மீன்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்ற னர்.

பத்தேவத்த மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற லக்கிஷாப் என்ற மீன்பிடிப் படகிலிருந்த மீன்களே கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-இ)

## 4 ஆண்டுகளாக

# காட்டுக்குள் வாழ்ந்த முன்னாள் போராளி

மட்டக்களப்பு, மார்ச் 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான பாலா என்பவர் 4 ஆண்டுகள் காட்டில் வாழ்ந்த நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுதியிலிருந்தே இவர் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் 4 ஆண்டுகளாகக் குடும்பத்தினரால் கைவிடப்பட்டிருந்த நிலையில், தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள றெட்பாணா எனும் கிராமத்துக்கு அப்பாலுள்ள காட்டுப் பகுதியில் தூர்ந்துபோன கொட்டகை ஒன்றில் மனநலம் குன்றிய நிலையில் வசித்து வந்துள்ளார்.

இது தொடர்பில் தகவலறிந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் மற்றும் அவரது சக முன்னாள் போராளிகளும் அவரை அணுகியுள்ளனர். இவர்களைக் கண்டதும் பாலா கட்டுப் பகுதிக்குள் மறைந்து விடுவார். பின்னர் அவரைத் தொடர்ந்து இரவு பகலாக அவதானித்து வந்துள்ளனர்.

பின்னர் அவரது உறவினர்கள் மற்றும் அந்தப் பகுதி கிராமசேவகர் ஆகியோரது உதவியுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உதவியுடன், உரிய இடத்துக்கே நோய்காவு வண்டி வரவழைக்கப்பட்டு அதில் சிகிச்சைகளுக்காக மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர்.

4 ஆண்டுகளாகக் காட்டிலுள்ள பழங்களை உண்டு கொண்டு, குளிக்காமல், முடிவெட்டாமல், சுகாதாரச் சீர்கேடான முறையில் அவர் வாழ்ந்து வந்துள்ளார். (எ-இ)

# கல்வயலில் வீட்டில் தளபாடங்கள் திருட்டு

சாவகச்சேரி, மார்ச் 10

சாவகச்சேரி கல்வயல் பகுதி வீடொன்றில் தளபாடங்கள் திருடப்பட்டன என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீட்டின் உரிமையாளர் யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் நிலையில், கல்வயல் பகுதி வீட்டில் இருந்த இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கட்டில் உள்ளிட்ட தளபாடங்கள் திருடப்பட்டுள்ளன.

திருட்டுத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார், வீட்டிலுள்ள பொருள்களை வாகனம் ஒன்றில் திருடிச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஒ-14,23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5,000 மாணவிகளுக்கு ஈரானில் விஷம்

## விசாரணை நடத்தும்படி ஐ.நா. பணிப்பு

தெஹ்ரான், மார்ச் 10
**ஈரானில் 5 ஆயிரம் பாடசாலை மாணவிகளுக்கு விஷம் கொடுத்த விவகாரம் தொடர்பில் உடன் விசாரணை நடத்துமாறு ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.**
ஈரான் தலைநகர் தெஹ்ரான் அருகேயுள்ள ஹொம் நகரில் பள்ளிக்குச் செல்லும் மாணவிகள் பலர் அடுத்தடுத்து, உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டனர்.
மருத்துவப் பரிசோதனையில் மாணவிகளின் உடலில் விஷம் கலந்து இருந்தது தெரியவந்தது. மத அடிப்படைவாதிகளால் பள்ளி செல்வதை தடுக்கும் வகையில் மாணவிகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.
சர்வதேச அளவில் இந்த விவகாரம் பூதாகரமாகியுள்ள நிலையில் ஈரான் அரசு தற்போது விசாரணையை முடுக்கிவிட்டுள்ளது.
ஏற்கனவே முஸ்லிம் பெண்கள் அணியும் ஹிஜாப் விவகாரம் கடந்த சில மாதங்களுக்கு முன் ஈரான் அரசை முடக்கிய நிலையில், தற்போது மாணவிகளுக்கு விஷம் கொடுத்த விவகாரம் பூதாகரமாகி உள்ளது.
இந்த நிலையில் ஐ.நா. கலாசார அமைப்பு இதுகுறித்து கவலை தெரிவித்ததுடன் பாதுகாப்பான கல்விக்கான உரிமை மீறும் இந்தச் செயல் குறித்து உடன் விசாரணை நடத்தமாறு உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகளால் மனம் சஞ்சலப்படும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நன்மைகள் நடைபெறும் நல்ல நாள். முடிவுகள் நல்லபடியாக அமையும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் துணையிருப்பார்.

**கடகம்:** உறவுகளால் ஆதாயம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** உற்சாகமான நாள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.. உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சோர்வு உண்டாகலாம். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. குடும்பத்தினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். அலைச்சலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மற்றும் தைரியத்துடன் செயற்படுவீர்கள். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். பேசும்போது பொறுமை தேவை.

# 1,000 நாய்களை பட்டினியிட்டு கொலை

## முதியவர் மிருகத்தனம்



சியோல், மார்ச் 10
தென்கொரியாவில் 60 வயதுடைய முதியவரொருவர் ஆயிரம் நாய்களைக் கூண்டில் அடைத்து பட்டினியிட்டு கொடூரக் கொலை செய்துள்ளார்.
அந்நாட்டு விலங்குகள் உரிமை ஆர்வலர் குழு மேற்கொண்ட சோதனையின் போது இந்தக் கொடூரச் செயல் கண்டறியப்பட்டுள்ளது.
குறித்த நபரின் வீட்டின் பின்புறத்தில் கூண்டுகள் மற்றும் றப்பர் பெட்டிகளில் ஆயிரக்கணக்கில் அழுகிய நிலையில் நாய்களின் உடல்கள் மீட்கப்பட்டன.
அத்துடன் சில நாய்கள் தோல் நோய்களால் பாதிக்கப்பட்டும் சத்து பற்றாக்குறையால் மெலிந்த நிலையிலும் காணப்பட்டன. குறித்த நபர் நாய்களை சங்கிலியால் கட்டி பட்டினி போட்டு உயிரிழக்க செய்துள்ளார் எனவும் 2020 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளாக இது தொடர்கிறது எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது என விலங்குகள் உரிமை குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

# 18 வயதுவரை படிக்காதவர் கேம்பிரிட்ஜ் பல்கலை பேராசிரியர்

வொஷிங்டன், பெப். 3
18 வயது வரை வாசிக்க, எழுதத் தெரியாமல் சிறுவயதில் ஏராளமான உடல் மற்றும் மனநலம் சார்ந்த பிரச்சினைகளை சந்தித்த ஜேசன் ஆர்டே என்பவர் தற்போது உலகின் தலைசிறந்த பலைக்கழகங்களில் ஒன்றான கேம்பிரிட்ஜ் பல்கலையில் அடுத்த மாதம் முதல் பேராசிரியராக பணியாற்றவுள்ளார்.
வளர்ச்சி தாமதம் மற்றும் ஒட்டிசம் ஆகிய குறைபாடுகள் காரணமாக ஜேசன் ஆர்டே என்பவர் தன்னுடைய இளம் பருவத்தில் ஏராளமான உடல் மற்றும் மனநலம் சார்ந்த பிரச்சினைகளை சந்தித்தார். ஜேசனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் இன்னொருவரது துணையில்லாது ஜேசன் வாழ்வது கடினம் எனவும் கூறியிருந்தனர்.
ஆயினும் தன்னுடைய லட்சியத்தை அடைவதற்கு தன்னுடைய 18ஆவது வயதில் முதன்முறையாக எழுத படிக்கக் கற்றுக்கொண்டார். உயர்கல்வி படிப்பதற்காக முயற்சித்த போதெல்லாம் பலமுறை நிராகரிக்கப்பட்டு கடின உழைப்புக்குப் பின் தற்போது உலகிலேயே பல்கலைக்கழக தரவரிசையில் இரண்டாமிடத்திலிருக்கும் கேம்பிரிட்ஜ் பல்கலையில் பேராசிரியராகியுள்ளார். (ச-இ)



தவக்கால சிந்தனை

# பிறருக்காக எம்மை அர்ப்பணிப்போம்!

தவக்காலம் என்பது செபத்தோடும் தியாகச் செயல் செய்வதோடும் நின்று விடுவதல்ல. உடலை வருந்தி கிறிஸ்துவின் அளவற்ற அன்பைக் குறித்து சிந்திப்பதோடு நிறுத்திக்கொள்ளும் காலமும் அல்ல. இயேசுக் கிறிஸ்துவைப்போல் பிறருக்காகப் பலியாக வேண்டிய வாழ்வுதான் கிறிஸ்தவ வாழ்வு என்பதை எடுத்துக்காட்டும் காலம்தான் தவக்காலம்.
இயேசுக் கிறிஸ்து தமது மறைதூதுப் பணியை பாலைநிலச் சோதனைக்குப்பின் தொடங்குகின்றார். நாற்பது நாள் இரவும் பகலும் நோன்பிருந்தார். அதன்பின் பசியுற்றார். அவர் பசியுறும் நேரம் இதை நன்கறிந்த அலகை இயேசுவை சோதிக்கத் தொடங்கியது. ஆண்டவன் இயேசு சோதனையை வென்றார். அலகை, இயேசுவையே சோதிக்க நினைத்தால் பாவிகளான, பலவீனமான எம்மை சோதிக்காமல் இருப்பானா?
அல்கையை வெல்ல விழிப்பும் செபமும் உபவாசமும்தான் காரணமாக இருந்தன. நாமும் அதைப் பயன்படுத்தி அலகையை வெல்வோம். ஆண்டவர் யேசு தமது விழிப்பையும் செபத்தையும் நோன்பையும் பாலைநிலத்திலேயே விட்டுவிடவில்லை. மண்ணுலகில் வாழ்ந்தகாலமெல்லாம் அதைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். நாமும் நமது தவக்கால பக்தி முறச்சிகளைத் தவக்காலத்தோடு முடித்துக்கொள்ளாமல் வாழ்நாள் எல்லாம் கடைப்பிடிப்போம்.

**மரியதாஸ் விக்ரோறியா,**
யாழ்ப்பாணம்.

# உலகின் வயதான பெண் 128 வயதில் உயிரிழப்பு

கேப்டவுண், மார்ச் 10
ஆபிரிக்காவில் உலகின் மிகவும் வயதான பெண்ணொருவர் தனது 128வது வயதில் உயிரிழந்துள்ளார்.
ஆபிரிக்க நாடான தென்னாபிரிக்காவின் வடமேற்கு மாகாணத்தில் வசித்து வந்தவர் ஜோஹன்னா மசிபுகோ.
1894ஆம் ஆண்டு பிறந்த இவர்தான் உலகின் மிகவும் வயதான ஆவார்.
இவர் தனது 128ஆவது பிறந்த தினத்தை அண்மையில் கொண்டாடிய நிலையில் பக்கவாத நோய் பாதிப்பால் நேற்று உயிரிழந்துள்ளார்.
மசிபுகோவுக்கு 7 பிள்ளைகள். அவர்களில் இருவரே தற்போது உயிருடன் உள்ளனர்.
மேலும் 50 பேரப் பிள்ளைகள் மற்றும் பூட்டப் பிள்ளைகளும் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இராணுவ மயமாக்கலும் தமிழின இசைவாக்கமும்

*''சிறு வயதில் எமது பாம்பன் பாலம் கட்டும்போது இந்திய கடற்படையின் ஆயுதத்தைக் கண்டோம். அதன்பின்னர் எமக்கு ஆயுதங்களைக் காண்பதற்கான வாய்ப்பு இல்லை. மக்களை அச்சுறுத்தும் வகையில் – அவர்களுக்குத் தெரியத் தக்கதாக – இப்படி ஆயுதங்களை எமது கடற்படையினர் வைத்திருக்கமாட்டார்கள். இப்போது இலங்கைக் கடற்படையின் ஆயுதங்களைப் பார்க்கும்போது பயமாக இருந்தது. ஆனால், இங்குள்ள (இலங்கை) மக்களுக்கு இது சகஜமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்''*

– இவ்வாறு கச்சதீவு பெருந்திருவிழாவுக்கு தமிழகத்தின் கன்னியாகுமாரி மாவட்டத்திலிருந்து வருகை தந்திருந்த 42 வயதான பெண் ஒருவர் தெரிவித்திருந்தார். அவர் தெரிவித்த இந்தக் கருத்தை சாதாரணமாகக் கடந்துபோய்விட்டோம். ஆனால், அவரின் கருத்தின் பின்னால் மிகப்பெரிய விடயம் ஒளிந்துகிடக்கின்றது. நாம் எவ்வளவு தூரம் 'இராணுவ மயமாக்கலுக்கு' பழக்கப்பட்டுவிட்டோம் என்பதை அவரது கருத்து கோடிடுகிறது. நாம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் போரைப் பார்த்தவர்கள். போர்ப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள். போர் காரணமாக ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களுடன் இருந்தவர்கள். அதிலிருந்து மீள்வதற்குரிய எத்தனங்களும் எமக்குத் தெரியவில்லை. அதனைவிட போர்க் கட்டமைப்புக்களை எமது வாழ்க்கையின் ஓரங்கமாக நாம் உள்வாங்கிவிட்டோம். இதனால்தான், தமிழகத்தைச் சேர்ந்தவருக்கு வியப்பளிக்கும் விடயம் எமக்குச் சர்வ சாதாரணமாகத்தோன்றுகின்றது. போரில்லாத சிவில் நிர்வாகம் நடக்கின்ற இடத்தில் போரியல் ஆயுதங்களுடன் படைகள் நடமாடுவதில்லை. கனரக ஆயுதங்களாக இருக்கலாம் அல்லது போருக்குப் பயன்படுத்தப்படும் துப்பாக்கிகளாக இருக்கலாம் அவை மக்களுக்குத் தெரியத்தக்கதாக எந்தவொரு அரசும் பயன்படுத்துவதில்லை.

இந்தியாவினுள் சிவில் நிர்வாகமே உள்ளது. தமிழகத்தில் பொலிஸாரே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகின்றனர். இராணுவம் என்பது ஓரிடத்தில் முகாமுக்குள் முடங்கியே இருக்கின்றது. அவசரகால நிலைமையின்போது மாத்திரமே அவர்கள் வெளியில் வருவார்கள். தமிழகத்தில் ஏன் இந்தியாவில் வீதியோரத்தில் துப்பாக்கி ஏந்திய இராணுவச் சிப்பாயைக் காண முடியாது. ஆனால், இலங்கையில் நிலைமை தலைகீழ். போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தும் 13 ஆண்டுகள் கடந்தும் போர்க்கட்டமைப்பிலிருந்து சிவில் வாழ்க்கைக்கு தமிழர் தாயகம் இன்னமும் திரும்பவில்லை. ஆனால், அதைக்கூட உணராதவர்களாகவே நாம் இருக்கின்றோம். இங்குள்ள போர்க்கட்டமைப்பை எமது வாழ்க்கையோடு ஒன்றிணைந்ததாக நாம் கருதத் தொடங்கிவிட்டோம். இலங்கை அரசாங்கத்தின் எதிர்பார்ப்பும் அதுவாகத்தான் இருக்கின்றது.


இப்போதும்கூட, யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் தொடங்கி குச்சொழுங்கைகள் வரையில் ஆகக்கூடியது 4 சிப்பாய்கள் துப்பாக்கியுடன் சுற்றுக்காவல் கடமையில் துவிச்சக்கர வண்டியில் ஈடுபடுகின்றனர். முக்கியமான சந்திகளில் சில மணி நேரங்கள் நிற்பார்கள். ஆனால், இது தொடர்பில் இப்போது எந்தவொரு அரசியல்வாதியும் அலட்டிக் கொள்வதில்லை. பொதுமக்கள்கூட அதைப்பற்றி அதிகம் கவனம்செலுத்துவதில்லை. இப்படியாக ஒவ்வொரு விடயத்திலும் நாம் எம்மை அறியாமலேயே இராணுவமயமாக்கலுடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதைக்கூட நாம் சொல்லாமல் கடந்து செல்கின்றோம். எமது அடுத்த தலைமுறைகூட இதைச் சரியென்று ஏற்றுக்கொள்ளும் அபாயச் சூழல்தான் இருக்கின்றது.

பொலிஸார் தவிர்ந்த ஏனைய ஆயுதப்படைகளை முகாம்களுக்குள் முடக்குவதற்கும், அந்த முகாம்கள்கூட தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஓரிரண்டு இடங்களுடன் மட்டுப்படுத்துவதற்கும் நாம் குரல்கொடுக்கவேண்டும். சிவில் நிர்வாகம் முழுமையாக நடைமுறையாகுவதற்கு எங்களால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் போதாதது. இராணுவமயமாக்கலை புரிந்துகொள்ளாமல் அதனை சகஜமாக எமது மக்கள் எடுத்துக்கொள்வதுதான், அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு போதாமல் இருப்பதற்குக் காரணம். 'இது தொடர்பில் எங்கள் அரசியல் தலைவர்கள் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். தேர்தல் அரசியலை மாத்திரம் முன்னெடுக்காமல் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் இத்தகைய அரசியலையும் மேற்கொள்ளவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

“என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் சோர்ந்துபோகமாட்டேன். காரணம் நான் நூறு வெற்றிகளைக் கண்டவன் அல்ல. ஆயிரம் தோல்விகளைப் பார்த்தவன்”

– தோமஸ் அல்வா எடிசன்



பயங்கரவாதச் சட்டம் பாய்ந்த

# அரச அலுவலர்களை மீளவும் பணியில் இணையுங்கள்

## சாவ. பிரதேசசபையில் பிரேரணை

கொடிகாமம், மார்ச் 10

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட அரச அலுவலர்களை மீண்டும் பணியில் இணைத்து மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை அமர்வில் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேசசபையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் உறுப்பினர் வை.ஜெகதாஸ் முன்வைத்த பிரேரணையில் உள்ளதாவது, பயங்கரவாத தடைச் சட்டத்தால் பல அரச அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு அவர்கள் முன்பு பணியாற்றிய அரச பணியில் தொடர்ந்து பணியாற்ற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். பளை மருத்துவமனையின் முன்னாள் அத்தியட்சகர் சி.சிவரூபன் உட்படப் பலர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை சேவையில் இணைப்பதன் ஊடாக மக்கள் பயனடைவர் - என்றுள்ளது. (ச-159)

# பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத் தூதுவர் வொல்கர் டர்க் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் சபையின் 52ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வொல்கர் டர்க் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை முகம் கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் சுமை என்பன சமூக, பொருளாதார உரிமைகளை அனுபவிப்பதற்கான நாட்டு மக்களின் இயலுமையில் தீவிர மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதை இலக்காகக் கொண்ட கொள்கைகளில் சமத்துவமின்மை தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படவேண்டும்.

தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக்கொண்டுவரவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படுவதுடன் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகள், கண்காணிப்புக்கள் என்பன முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

நிலைமாறுகால நீதியை அடைந்துகொள்வதை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் செயற்றிறன்மிக்க நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு எமது அலுவலகம் தயாராக உள்ளது - என்றார். (எ-இ)

**நாளை** 11.03.2023 சனிக்கிழமை மாசி 27

சுபநேரம் : 03.23 - 04.53

ராகுகாலம் : 09.23 - 10.53

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்குழுத் தெரிவும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஏழாலை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க செயற்குழுத் தெரிவும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்துவம் பெறுபவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

(ஒ-14)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் வைரவிழா ஆண்டின் வருடாந்த இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டி பிரதி அதிபர் எஸ். ரவிச்சந்திரன் தலைமையில் கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பிரதிப்பணிப்பாளர் ரி.பால்ராஜ், யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ.யோகலிங்கம், நிதி அனுசரணையாளர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், முஸ்லிம் உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் உட்படப் பலர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

(ய-20)


## கண்ணீர் அஞ்சலி

### இராமுப்பிள்ளை செல்வநாதன்

(செயலாளர், கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்க நம்பிக்கை நிதியம்)



பிறப்பு 11.06.1956 இறப்பு 08.03.2023

எமது கொ.இ.க.ப.ம.ச.நம்பிக்கை நிதியமானது 2002 இல் ஸ்தாபிக்கப்பட்டபோது அதன் ஆரம்ப பணிகளிலிருந்து இன்று வரை தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல மில்லியன் ரூபாய் பணத்தினை திரட்டி பல நூற்றுக்கணக்கான மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் பெரும் பங்காற்றினார். நம்பிக்கை நிதியத்தின் நீண்ட காலம் செயலாளராக இருந்ததுடன் பழைய மாணவர் சங்கத்திலும் ஏனைய பல அமைப்புகளிலும் தன்னை இணைத்துக் கொண்டு கல்லூரியினதும் கொக்குவில் கிராமத்தினதும் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றினார். அன்னாரின் மறைவு எமது கல்லூரிக்கும் கிராமத்திற்கும் பேரிழப்பாகும். அமரரின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி,**
**கொக்குவில்.**

CS 23798)1-6

## வேலையாட்கள் தேவை

தோட்ட வேலைக்கு வேலையாட்கள் தேவை. (இயக்கச்சியில்)

தொடர்புகளுக்கு: 077 871 2347

## JDr முதியோர் பராமரிப்பு சேவை

உங்கள் வீடுகளுக்கு வந்து பயிற்சி பெற்ற முதியோர் பராமரிப்பாளரால் சேவை வழங்கப்படுகின்றது.

**070 134 8384**

## பெயர் மாற்றம்

தலுவில் வீதி, நவாலி வடக்கில் வசிக்கும் **மீராமொகுடீன் சின்னத்துரை** ஆகிய நான் இன்று தொடக்கம் **மீராமொகுடீன் அமலசிங்கம்** என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன் இனிவரும் காலங்களில் **மீராமொகுடீன் அமலசிங்கம்** என கையொப்பம் இடுவேன் என உறுதிப்படுத்துகின்றேன்.

**மீ.அமலசிங்கம்**

## வேலைவாய்ப்பு




யாழில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

1) **எழுதுவினைஞர் (Clerk)**
2) **கணக்கு எழுதுவினைஞர் (Accounts Clerk)**

ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் (13.03.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00-02.00 மணிவரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கேள்வி அறிவித்தல்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி

### சத்துமா தயாரிப்பதற்கான உலர் உணவுகள் பெறுகைகள் - 2023

01. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள், உலர் உணவுகள் வழங்குவதற்கு இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

02. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித் தனியாக மேற்கொள்ளப்படும்.

03. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப்பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
    அ. விலைமனுதாரர் வலிதான வியாபாரப் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    ஆ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி. (தொலைபேசி இல 0212285932 / 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.

06. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கண்டி வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 13.03..2023 ம் திகதி முதல் 23.03.2023 ம் திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

07. 17.03.2023ம் திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு கேள்வியாளர்களுக்கான பெறுகை நடைமுறைமுறைகள் தொடர்பான முன் கூட்டம் (pre-bid meeting) எமது அலுவலகத்தில் நடைபெறும். அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் தவறாமல் கலந்துகொள்வது அவசியம்.

08. கேள்விகள் யாவும் 23.03.2023ந் திகதியன்று முற்பகல் 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக தலைவர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின், கண்டி வீதி, கிளிநொச்சி முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகைக்கான இலக்கத்தினை தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் 23.03.2023 ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும்.

09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்படல் வேண்டும்.

10. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக் குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

| இல | விபரம் | குறியீட்டு இலக்கம் | பெறுகைப் பிணைத் தொகை | பெறுகைப் பிணைத் தொகை செல்லுபடிக் காலம் | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | சத்துமா தயாரிப்பதற்கான உலர் உணவு | NP/K/RDHS/Unicef/Dryfood/2023 | ரூபா.30,000.00 | 25.05.2023 | ரூபா.1,500.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,**
**கிளிநொச்சி.**

TP- 0212285719, Fax- 0212285931

E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, மார்ச் 10

நாவற்குழி கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய பதில் கடமை அதிபர் திருமதி சத்தியபாமா அருளானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப்பணிப்பாளர் வ.நடராசா கலந்துகொள்ளவுள்ளார்.

(ச-9)

## ரணிலும் சஜித்தும் கைகோர்க்க வேண்டும்

### மயந்தவின் அவா

கொழும்பு, மார்ச் 10

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது அவா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி என இரு துருவங்களாகச் செயற்படுவதை விடுத்து ஒன்றிணைந்து செயலாற்றுவதனூடாக நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்சியடையச் செய்யலாம்.

பொது இணக்கப்பாட்டுடனேயே நிதி பற்றிய குழுவின் தலைமைப்பதவியை ஏற்கத் தீர்மானித்தேன். ஆயினும் அதே நிலைப்பாட்டுடனேயே இன்று பதவி விலகிவிட்டேன்.

எனக்கு கட்சி மாறும் எண்ணம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் இணையவேண்டும் என்பதே எனது கனவு.

ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு ஆபத்து என்பதை உணர்ந்து இரு கட்சிகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்- என்றார்.

(ச-44)

## ஆக்கப்பொருள் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

தென்மராட்சிப் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியோரின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச கிராமஅபிவிருத்தி அலுவலர் த.லலிதசங்கர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலர் திருமதி உஷா சுபலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதேச உதவிப் பிரதேசசெயலர் திருமதி தமிழினி சதீஸ், யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி சுனேத்திரா சுதாகர் ஆ யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ச-9)

# INVITATION FOR BID 2022

## OFFICE OF THE REGIONAL DIRECTOR OF HEALTH SERVICES, KILINOCHCHI

01. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services,Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the Renovation work described in the table below.

02. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall havebeen registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.

04. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are **provided in the Bidding Data and Contract Data** (Section 5).

05. Interested bidders may obtain further information from address given below in 6, and inspect the bidding documents at the same place on any working days from 9.00 A.M to 3.00 P.M.

06. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on thesubmission of a written application to the **Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road, Kilinochchi. (T.P: 021 228 5932/021 2285719, Fax: 021 2285931) from 9.00 A.M to 3.00 P.M during the period mentioned in the table** upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.

07. Bids (Original, Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road ,Kilinochchi** on or before on the date mentioned in the table. **Bid number must be written on the left-hand upper corner of envelope.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

08. Pre-Bid Meeting will be held at **Regional Director of Health Services, Kilinochchi , Kandy Road,** Kilinochchi commencing at on the date mentioned in the table.

09. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the Table.

| CATEGORY 1 | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 13.03.2023 until 23.03.2023 |
| Pre-Bid Conference | at 10.00A.M on 16.03.2023 |
| Closing and Opening of Bids | at 10.30 A.M on 23.03.2023 |

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/KOC/RDHS/PSSP /Se.Hut/Pa/2023 | Construction of Security Hut DH Palai | 1.6 | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 16,800.00 | 25.05.2023 |

| CATEGORY 2 | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 13.03.2023 until 23.03.2023 |
| Pre-Bid Conference | at 11.30A.M on 16.03.2023 |
| Closing and Opening of Bids | at 11.30 A.M on 23.03.2023 |

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/KOC/RDHS/PSSP /wast/jeyapu/2023/01 | **Construction of waste segregation store PMCU Jeyapuram** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | **8,800.00** | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP /wast/pirama/2023/02 | **Construction of waste segregation store PMCU Piramanthanaru** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | **8,800.00** | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP /wast/kanda/2023/03 | **Construction of waste segregation store PMCU Kandawalai** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | **8,800.00** | 25.05.2023 |
| NP/KOC/RDHS/PSSP /wast/vanne/2023/03 | **Construction of waste segregation store PMCU Vannerikulam** | **0.8** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | **8,800.00** | 25.05.2023 |

| CATEGORY 3 | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 13.03.2023 until 23.03.2023 |
| Pre-Bid Conference | at 1.00P.M on 16.03.2023 |
| Closing and Opening of Bids | at 1.00 P.M on 23.03.2023 |

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/KOC/RDHS/PSSP /Dental/Vadd/2023 | **Improvement of Dental unit &Dispensary at DH Vaddakkachchi** | **1.0** | 90 Days | C8 and C9 (Buildings) | 1,500.00 | 10,000.00 | 25.05.2023 |

| CATEGORY 4 | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 13.03.2023 until 23.03.2023 |
| Pre-Bid Conference | at 1.00P.M on 16.03.2023 |
| Closing and Opening of Bids | at 1.00 P.M on 23.03.2023 |

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in Millions) | Contract Period | Required Grade | Non Refundable Fees | Required Bid Security: Security Amount | Required Bid Security: Valid Period |
|---|---|---|---|---|---|---|---|
| NP/KOC/RDHS/PSSP /Kitchen/Vadd/2023 | **Construction of Kitchen DH Vaddakkachchi** | **5.8** | 180 Days | C9 ,C8 and C7 (Buildings) | 1,500.00 | 58,000.00 | 22.06.2023 |

| CATEGORY 5 | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 13.03.2023 until 23.03.2023 |
| Pre-Bid Conference | at 2.00P.M on 16.03.2023 |
| Closing and Opening of Bids | at 2.00 P.M on 23.03.2023 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million without VAT | Non Refund | Security Amount | Validity Period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/K/PSSP/Des.com./2023 | Desktop Computer | 1.8 | 1,500.00 | 18,600.00 | 25.05.2023 |

Chairman,
Regional Procurement Committee,
Office of the Regional Director of Health Services, Kilinochchi.
TP- 0212285719 Fax- 0212285931
E mail - rdhskoc@gmail.com, financerdhskoc@gmail.com

(ex.39415) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங்க ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் கலந்துகொள்ளவுள்ளார். (ச)


### தேவை

கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதி தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 119 0267

### THISH HOTEL
### பணியாளர்கள் தேவை

விடுதி முகாமையாளர்கள், விடுதி சுத்திகரிப்பு தொழிலாளர்கள் ஆகிய பதவிகளில் வெற்றிடம் காணப்படுவதனால் அப்பதவிகளுக்கு தகுதியானவர்கள் தமது விண்ணப்பத்தினை (சுயவிபரக் கோவை) 20.03.2023 திங்கட்கிழமைக்கு முன்னதாக எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
Thish Hotel
No. 141, 1/1k.k.s. Road, Chunnakam.
T.P.:076 572 2454 (cs.1115) (2.6)

### தேவை

காலியில் உள்ள கோயில் ஒன்றிற்கு கணினி அறிவுடைய உதவியாளரும் மற்றும் பல வேலையாட்களும் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 071 133 1133

### தேவை

பேலியகொடையில் உள்ள கோயில் ஒன்றிற்கு கணினி அறிவு உடைய உதவியாள் தேவை. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 349 3062


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 03 . 1969

மறைவு 10 . 03 . 2022

### அமரர் ஜெகதீஸ்வரன் சந்திரவதனி

நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துக் கொண்டேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். 2:தி:4:7

**எம் குடும்பத்தின் பாசமிகு தங்கையே!**
**நீ இறந்து ஓராண்டு ஓடினாலும்**
**உம் நினைவு எம்மைவிட்டு நீங்காதம்மா**
**உன் ஆன்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.**

செபமாலைக் கன்னியர்மடம்,
பட்டிக், மன்னார்.

சகோதரர்கள்

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தையா சிவராசா

(உரிமையாளர் நிமலன்ஸ் மின்னகம் - கிளிநொச்சி)

மலர்வு 04.04.1951

உதிர்வு 01.03.2021



**திதி: மாசி அபரபக்க திருதியை (10.03.2023)**

அன்பின் உறைவிடமாய் பாசத்தின்
- பிறப்பிடமாய்
அகிலத்தில் நாம் வாழ்வாங்கு வாழ
- வழிகாட்டியாய் அமைந்தீர்கள்.
எம் ஏற்றங்களின் ஏணியாயிருந்து
எம் முயர்வுகளின் ஆதாரமாய்த்
- திகழ்ந்தீர்கள்
கால நீட்சியில் கரைந்து போகாது
உங்கள் நினைவுகளின் நிறங்கள்
எம் அன்புத் தந்தையே
ஆண்டுகள் இரண்டென்ன
பற்பல ஆண்டுகள் கடந்தாலும்
எம் நினைவுப் பெருவெளிதனில்
உங்கள் ஆத்மாவின் அர்த்தத்தை
ஆத்மார்த்தமாய் நிறைந்திருப்போம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"பாக்கிய பவனம்"
மனோகரா,
அல்வாய். (cs.22300) (2.6)

[illegible]
குடும்பத்தினர்

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 . 02 . 1941



மறைவு 29 . 01 . 2023

கடந்த (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகலிங்கம் கனகரட்ணம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.03.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று, நாளை மறுதினம் (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கும், நேரடியகாவும், தொலைபேசியூடாகவும், முகநூல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி பதாகைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

V.T.S. வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (CS/1119)4,6

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 29 . 01 . 1930



மறைவு 08 . 02 . 2023

### அமரர் கந்தையா செல்லம்மா

கடந்த 08.02.2023 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பக் குலவிளக்கு **அமரர் கந்தையா செல்லம்மா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (08.03.2023) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (CS 1104) 4-6

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கலாசார நிதிய முறைகேடு விசாரிக்க புதிய குழு நியமிக்கவும்

## கோப் குழு பரிந்துரை

கொழும்பு, மார்ச் 10

2016-2019 காலப்பகுதிக்கிடையில் மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் முரண்பாடுகள் ஆகியவை குறித்து விசாரிப்பதற்கு ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான புதிய குழுவை நியமித்து 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோப் பரிந்துரைத்துள்ளது.

මධ්‍යම සංස්කෘතික අරමුදල
மத்திய கலாசார நிதியம்
CENTRAL CULTURAL FUND

மத்திய கலாசார நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கோப் குழுவில் வழங்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த புதன்கிழமை கூடியது.

கூட்டத்தில் விசேட கணக்காய்வு அறிக்கையில் புலப்பட்ட விடயங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டதாக கோப் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்ட உள்ளக விசாரணைக்குழு தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த உள்ளக விசாரணைக்குழு மத்திய கலாசார நிதியத்தின் கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டத்தை நடத்துவது தொடர்பிலும், நிதியம் உரிய முறையில் செலவினங்களை மேற்கொண்டுள்ளதா? என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அதற்கமைய கட்டுப்பாட்டுச்சபையின் 209 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு 11 உறுப்பினர்களில் 7 பேர் மாத்திரமே இணக்கப்பாட்டைத் தெரிவித்தனர். முன்னாள் பிரதமர் உட்பட 4 பேர் தமது கையொப்பத்தை இடவில்லை என்று கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட 209 கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டத்தின் தீர்மானங்கள் 210ஆவது கூட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அதற்கமைய கோப் குழுவின் தலைவர்,

விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆராய்வதற்காக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டதாகக் கோப் குழுவில் தெரிவிக்கப்பட்ட தனிநபரைக் கொண்ட உள்ளக விசாரணைக் குழுவைக் கலைக்கவும், முறைகேடுகளை ஆராய ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைமையிலான புதிய குழுவொன்றை நியமிக்கவும், குழுவின் ஊடாக உப குழுக்களின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை 3 மாதங்களுக்குள் கோப் குழுவுக்கு சமர்ப்பிக்கவும் வேண்டுமென பரிந்துரைத்தார். (ச-இ)






# உண்மை நல்லிணக்க ஆணைக்குழு விரிவான கலந்துரையாடல் தேவை

## மன்னிப்புச்சபை அழுத்தம்

கொழும்பு, மார்ச் 10

காணாமற்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற உள்ளகப் பொறிமுறைகள் தற்போது அவசியமற்றவையாக மாறியிருக்கின்றன. எனவே, பொறுப்புக்கூற சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் உண்மையைக் கண்டறிவதற்கான புதிய பொறிமுறையானது நாடளாவிய ரீதியிலான விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனிதஉரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் இலங்கையின் மனிதஉரிமைகள் நிலவரம் தொடர்பில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:

பொருளாதார நெருக்கடியின் விளைவாகக் கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். போராட்டங்களை இராணுவ மயப்படுத்தப்பட்ட முறைமையின் ஊடாக அரசாங்கம் எவ்வாறு கையாண்டது என்பதையும், சில போராட்டங்களுக்கு எதிராக எவ்வாறு அநாவசியமானதும் மிகையானதுமான பாதுகாப்புப்படையினர் பயன்படுத்தப்பட்டனர் என்பதையும் நாம் ஆவணப்படுத்தியுள்ளோம்.

போராட்டங்கள் மீதான அடக்குமுறைகளை முடிவுக்குக்கொண்டுவருமாறும், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அடுத்ததாக பயங்கரவாதத்தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பதாக இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் உத்தரவாதமளித்திருப்பினும், அச்சட்டம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே பொறுப்புக்கூறல் சார்ந்த பொறிமுறைகளை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதேவேளை உண்மையைக் கண்டறியும் புதிய பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்துமேயானால், அது நாடளாவிய ரீதியிலான கலந்துரையாடல்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் அறிகுறி இருந்தால் உடனே மருத்துவரை நாடுங்கள்

## புற்றுநோய் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

மன்னார், மார்ச்10
பெண்கள் புற்றுநோய்களுக்கான அறிகுறி தென்படும் பட்சத்தில் அலட்சியம் காட்டாது ஆரம்பத்திலே மருத்துவரை நாடவேண்டும் என்று பெண் நோயாளர்களுக்கான புற்றுநோய் சத்திர சிகிச்சை மருத்துவ நிபுணர் மருத்துவர் கலாநிதி தனுஷா தெரிவித்தார்.

புற்றுநோய் தொடர்பாக பெண்களுக்கு விழிப்புணர்வுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோயை சூலகம், கர்ப்பப்பை, கர்ப்பப்பைகழுத்து, யோனியும் அதைச் சுற்றியுள்ள தோல் பகுதிகள் ஆகியவற்றில் இனங்காணலாம். அதைப்பெண்கள்தங்களது அலட்சியத் தன்மையால் கண்டு பிடிக்காமல் விட்டு விடுகின்றார்கள். கர்ப்பப்பையில் உருவாகும் புற்றுநோய் அதி கமாக 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே உருவாகும். அதாவது மாதவிடாய் நின்றபின்பே இது அதிகமாக உருவாகின்றது.

இந்த வேளையில் பெண்களுக்கு குருதிப்போக்குஏற்படுமாகில் இவற்றை அலட்சியப்படுத்தாது மருத்துவரிடம் காண்பிக்கவேண்டும். இதிலிருந்துதவறினால் இதன்நிலைமூன்று, நான்குக்குசென்றுவிடும். இதன்பின் சத்திர சிகிச்சை செய்வதுகடினமானது. அடுத்து35வயதிலும் 45 வயதிலும் கர்ப்பப்பை கழுத்துப் பரிசோதனையை ஒவ்வொரு பெண்களும் மேற்கொள்ளவேண்டும்.

இதில் ஏதாவது வித்தியாசமாக கலங்கல் இருக்கின்றதாஎனப்பார்க்கப்படும். புற்றுநோய் வருவதற்கு முன்பே இதைக் கண்டுபிடித்து விடலாம்.

யோனிப் பகுதிகளில் வித்தியாசமான முறையில் நோவு ஏதாவது உணரப்பட்டால் உடனே மருத்துவரை நாட வேண்டும். புண் அல்லது காய்ச்சல் அடிக்கடி வருவதை உணர்ந்தால்அலட்சியப்படுத்தக்கூடாது.

சூலகத்தில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டு பிடிப்பது கடினம். இருந்தும் மேற்கூறப்பட்ட பகுதிகளில் ஏற்படும் புற்றுநோயை இலகுவாகக் கண்டுபிடித்துவிடலாம். ஆகவே பெண்கள் புற்றுநோய் அறிகுறிதொடர்பில்அலட்சியமாக இருக்காது செயற்படுவதே நன்று - என்றார்.

(எ-14,60)

## விபத்தில்...

(வயது -63) என்ற முதியவரே உயிரிழந்தவராவார்.

துவிச்சக்கரவண்டி மற்றும் டிப்பர் என்பன நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. டிப்பர் வாகனம் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-26,23,66)

## கொடிகாமம்...

கொடிகாமம் பொலிஸ் பரிசோதகர் மு. உதயானந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. ஆனால், கஞ்சாவைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் மோட்டார்சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது. (அ-ம-26,125,23,159)

## பணம்,...

ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசி என்பனவும் திருடப்பட்டுள்ளன.

கோப்பாய் மத்தி கொட்டைக்காடு பகுதியில் தனிமையில் வசித்துவந்த மூதாட்டி ஒருவருடைய வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருட்டுத் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-125)

## 36 பவுண்...

என்று பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது,

வீட்டிலிருந்த அனைவரும் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றவேளை, வீட்டின் முன்கதவை உடைத்து இந்த நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-26,23)

## கட்சிதாவியோரை...

கட்சியில் இருந்து நீக்கக்கூடாது என விளக்கம்கோரி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிரந்தர உறுப்பினராக இருந்துகொண்டு பிறகட்சிகளில் போட்டியிடும் உறுப்பினர்களிடமே முதற்கட்ட நடவடிக்கையாக விளக்கம் கோரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் இராமலிங்கம் இராகினி உட்பட 14 உறுப்பினர்களுக்கு எதிராகவே கட்சியின் செயலாளரால் இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. 14 நாள்களுக்குள் அவர்களிடமிருந்து விளக்கமும் கோரப்பட்டுள்ளது.

(அ-ம)

## வாக்குச்சீட்டு...

அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு, அரச அச்சகர் லியனகே நேரில் சென்று கடிதங்களைக் கையளித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தில், வாக்குச் சீட்டு அச்சிடும் காலப்பகுதியில் பகல்வேளையில் 35 பொலிஸ் உத்தியோகத்தர்களும் இரவு வேளையில் 28 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக் கடமைகளுக்காகத் தேவை என்று கோரப்பட்டுள்ளது.

இதேவேளை- 500 மில். ரூபா அச்சகப் பணிகளுக்குத் தேவை என்று மதிப்பிட்ட நிலையில், 40 மில்லியன் ரூபாவே தற்போது வழங்கப்பட்டுள்ளது. எனவே மிகுதித் தொகையை விரைந்து விடுவிக்குமாறு நிதி அமைச்சுக்கு அரச அச்சகர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம)

## வடக்குப்...

வடக்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களாலும் வவுனியா பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களாலும் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட பொருள்களின் விலைகள் குறைக்கப்படவேண்டும், நியாயமற்ற வரிக்கொள்கையை நீக்கி நியாயமான முறையில் அது பரிசீலனை செய்யப்படவேண்டும், பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும், கடன் வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படக்கூடாது, சம்பள முரண்பாட்டுக் குழுவின் அறிக்கை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும், பல்கலைக்கழக பணியாளர்களுக்கு இல்லாமல் செய்யப்பட்ட 15 வீத ஊதிய அதிகரிப்பை உடன் வழங்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் த. சிவரூபன் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக நாங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் பல்வேறு கோரிக்கைகளை விடுத்துவந்தோம். எனினும், எங்களின் கோரிக்கைகள் எவையும் செவிசாய்க்கப்படவில்லை.

எனவே 9 ஆம் திகதியாகிய இன்று (நேற்று) அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வது என்றும் 15ஆம் திகதி அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வது என்றும் தீர்மானித்துள்ளோம். 15ஆம் திகதிக்குள் எங்களின் கோரிக்கைகள் செவிமடுக்கப்படாவிட்டால் தொடர்ச்சியாகப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவது என்றும் தீர்மானித்துள்ளோம் - என்றார்.


(அ-ம-125)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பஞ்சலிங்கம் தவமணி

அமரர் பஞ்சலிங்கம் குகநேசலிங்கம் (குகன்)





தோற்றம் 24.01.1938 மறைவு 19.02.2022

தோற்றம் 08.04.1970 மறைவு 30.11.2021

**திதிநாள் - 10.03.2023**

நீங்காத நினைவுகள் தந்து நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தும் ஓயவில்லை உங்கள் நினைவுகள்
அகலவில்லை உங்கள் அன்பு முகங்கள்
உலகமும் நியம் இல்லை உறவுகளும் நியம் இல்லை.
என்று உணர்ந்தோம் உங்கள் இழப்பால்
இறைவனும் இரக்கம் அற்றவன் என்று உணர்ந்தோம்.



உங்கள் இறப்பால் என்ன செய்வது
எங்கள் மனம் ஏங்குகிறது.
அழுத விழிகளுக்கு ஆறதல் காட்ட
ஒருமுறையாவது வாருங்கள்
உங்கள் திருமுகங்கள் காண
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

சங்கரத்தை, வட்டுக்கோட்டை. உங்கள் அன்புக் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நொதேர்ண் மருத்துவமனையில் இலவச இருதய அறுவைச்சிகிச்சை

யாழ்ப்பாணம், மார்ச் 10
மறைந்த இருதய சத்திரசிகிச்சை நிபுணர் ரவிபெருமாள்பிள்ளையால் ஸ்தாபிக்கப்பட்ட ஒக்சோனியன் ஹார்ட் பவுண்டேஷன் நிறுவனத்துடன் நொதேர்ண் சென்றல் மருத்துவமனை இணைந்து இலவச இருதய அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றது.
அந்தவகையில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த முதலாம் திகதி இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர் என்.சிவசங்கர் மற்றும் மயக்க மருந்து நிபுணர் ரி.றமணன் ஆகியோர் தலைமையிலான மருத்துவக் குழுவால் வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் இருதய அறுவைச் சிகிச்சை நடைபெறும் ஒரேயொரு தனியார் மருத்துவமனையாக நொதேர்ண் மருத்துவமனை இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## 45 கிலோ கஞ்சா சுழிபுரத்தில் மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 10
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம், சவுக்கடி கடற்கரையில் 45 கிலோ கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார்.
புலனாய்வுத் தகவலுக்கமைய சுழிபுரம், சவுக்கடி கடற்கரையில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. (ம-125)

### நம்பகத்தன்மைக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது அமர்வு தற்போது நடைபெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் இலங்கை தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் மற்றும் ஜனநாயக உரிமைகள் பேணப்படும் விதம் தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தின. இதன் போதே இலங்கை தொடர்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இணையனுசரணை நாடுகளின் சார்பில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரிட்டனின் தூதுவர் சிமொன் மான்லி மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மீதான 'வலுவான நடவடிக்கைகள்' குறித்த எமது கரிசனைகள் இன்னமும் தொடர்கின்றன. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும், கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமையையும் இலங்கை பாதுகாக்கவேண்டியது அவசியமாகும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஊக்குவிப்பதில் சிவில் சமூக அமைப்புக்கள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, சிவில் சமூக அமைப்புக்களின் முக்கியமான செயற்பாடுகளுக்கான இடைவெளி உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம்.
மேலும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும், முக்கிய நிறுவனங்கள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துதல் உள்ளடங்கலாக ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுவதுடன், இதில் இலங்கை தொடர்பில் நம்பிக்கையைப்பேண உதவும் தேர்தல் கட்டமைப்பும் உள்ளடங்குகின்றது. அடுத்ததாக நாட்டில் நீண்டகாலமாகத் தொடரும் ஊழல்மோசடிகள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு என்பன தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.
அதேவேளை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையால் முன்வைக்கப்பட்ட கடப்பாடுகளின் அடிப்படையில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துதல் உள்ளடங்கலாக நிலைமாறுகால நீதியை உறுதிசெய்வது அவசியமாகும். மேலும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறான சட்டமொன்றின் மூலம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யவேண்டும் - என்றார். (அ-ம)

### 35 லட்சம்...

நேற்று இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.
புதுக்குடியிருப்பு, விநாயகர் வீதி தேவிபுரம் பகுதியில் கள்ளநோட்டு அச்சிடப்படுவதாக சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொண்ட நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து கள்ளநோட்டு அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரமும் 5 ஆயிரம் ரூபா தாள்கள் (கள்ள நோட்டுக்கள்) 700 என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. அவர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-19)

### கீரிமலை...

அகில இலங்கை [illegible] தலைவரான ஆறு.திருமுருகன். இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கை சைவமக்களின் மிகத்தொன்மையான வரலாற்றிடம் கீரிமலை. இந்தப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலைபோன்றதொரு பாறைப்பகுதியில் ஆதிசிவன் ஆலயம் அமைந்திருந்தது. அந்த ஆலயம் தற்போது அங்கு இல்லை என்று அந்த இடத்துக்குச் சென்றுவந்தவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.
மேலும் பெருமைமிகு பெண் சித்தரான சடையம்மா சமாதி ஆலய மடம், அதற்கு அருகிலிருந்த சங்கரசுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரைவேலன் ஆலயம் இவற்றைக் காணவில்லை என்ற செய்தி சைவமக்களுக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தந்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை உடன் பதில் வழங்கவேண்டும்.
தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த் ஆலயங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அழிக்கப்பட்ட கோவில்கள் இருந்த இடத்தை மக்களிடம் உடன் ஒப்படைப்பதுடன், அந்த இடத்தில் மீண்டும் கோவில்களைக் கட்டுவதற்கான அனுமதியையும் வழங்க வேண்டும். பொதுமக்கள் அங்குள்ள தங்கள் காணிகளைப் பார்ப்பதற்கும் எஞ்சியுள்ள ஆலயங்களைத் தரிசிப்பதற்கும் ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-66)

### தேர்தல் பணிகளை...

பணிகளை மீள ஆரம்பிக்குமாறு ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் எழுத்துமூலமான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை விடுக்கவில்லை.
கடந்த செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும், 25 மாவட்டங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அன்றைய தினமே பி.ப. 3 மணிக்கு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி இடைநிறுத்தப்பட்ட பணிகளை மீள ஆரம்பிக்குமாறு வாய்மூலம் பணிப்புரை வழங்கப்பட்டது.
அத்துடன் தேர்தலுக்குப் போதுமான கால இடைவெளி இருப்பதால் மேலதிக நேரக் கடமைக்குரிய கொடுப்பனவு, மேலதிக எரிபொருள் கொடுப்பனவு என்பன வழங்கப்படாது என்றும் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் தேர்தல் பணிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான எழுத்துமூல உத்தியோகபூர்வ அறிவித்தல் இதுவரை தேர்தல்கள் ஆணைக்குழுவால் விடுக்கப்படவில்லை. (அ-ஒ,5)

### கால்களை...

தெரியவில்லை. அதனால்தான் மண்டியிட்டு, பாதங்களைநக்கிகடன்பெறுவதற்கு முற்படுகின்றது. இப்படியான அரசை மக்கள் சக்தியுடன் நிச்சயம் விரட்டியடிப்போம் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சூளுரைத்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு சூளுரைத்தார். இது தொடர்பில் சஜித் மேலும் தெரிவித்ததாவது:-
'போராட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டில் இடம்பெறுவது ஜனநாயக ஆட்சியா? சர்வாதிகார ஆட்சியா? பல்கலைக்கழக மாணவர்கள்மீது அரச வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. களனி மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க றோயல் கல்லூரியின் பழைய மாணவர். ஆனால், றோயல் கல்லூரி மாணவர்களுக்கும் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, வெட்கம். இந்த அரசின் அடக்குமுறைகளுக்கு நாம் அஞ்சமாட்டோம். பல்லாயிரக்கணக்கான மக்களுடன் வீதிக்கு இறங்கி, தேர்தலை நடத்துவோம். அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் எவ்வாறு சரியாக கொடுக்கல் - வாங்கல் செய்வது என்பது குறித்து அரசுக்கு தெரியவில்லை, அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிட்டுள்ளது. காலை நக்கி கடன்பெறுவதற்காக, மக்கள்மீது சுமைகள் திணிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணம் உயர்வு, வரிக்கொள்கை எல்லாம் இதனால்தான் வந்துள்ளன. இப்படியான அரசை தேர்தல்மூலம் நிச்சயம் விரட்டியடிப்போம்' -என்றார். (அ-ம,44)

### யாழ். மத்திய...

நூற்றாண்டு கால கிரிக்கெட் போட்டி நேற்றுக் காலை ஆரம்பமானது. 116 ஆவது முறையாக இடம்பெறும் இந்தப்போட்டி, இம்முறை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று, இன்று, நாளை என மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 66 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக அஜே 74 ஓட்டங்களையும், விதுஷன் 71 ஓட்டங்களையும், சன்சஜன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் யாழ். பரியோவான் கல்லூரி சார்பில் அபிஷேக் 4 விக்கெட்டுக்களையும், கஜகர்ணன், விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.
பதிலுக்கு தனது முதலாம் இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிவரும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 17 பந்துப் பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றபோது நாள் நிறைவுக்கு வந்தது. இன்று இரண்டாவது நாளாகும். (அ-ம)

### தேர்தல் வர்த்தமானி...

உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது. அதனை இரத்துச் செய்து புதிய திகதியான ஏப்ரல் 25ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்ற வர்த்தமானி நேற்றுக்காலை வரையில் வெளியாகியிருக்கவில்லை. நேற்று மதியத்தின் பின்னரே அரசாங்க அச்சகத்தின் இணையத்தளத்தில் அது தரவேற்றப்பட்டுள்ளது. (அ-ஒ.5)

### ரூபா...

இது தொடர்பில் பொருளாதார வல்லுநர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் தொகைக்கு இலங்கை அதன் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலைப் பெற்றாலும், நிதித் திட்டத்துக்கு இணங்குவது கடினமான சவாலாக இருக்கும். வெளிநாட்டுக் கடனை அடைப்பதற்காக கையிருப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம், பலவீனமான பொருளாதாரம் மற்றும் எதிர்வரும் தேர்தல்கள் இதற்குத் தடையாக இருக்கலாம். இதன்படி, இந்த வருட இறுதிக்குள் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 390 என்றவாறாகச் செல்லலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வள்ளுவர் தினமும் மகளிர்தின நிகழ்வும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருவள்ளுவர் நாளும் உலக மகளிர் தினமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிப் பேச்சாளராக சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் கலந்துகொண்டார்.

கலாசாலையில் அமைந்துள்ள திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மாசி உத்தர நாளில் இடம்பெறும் திருவள்ளுவர் குருபூசையை அனுஷ்டிக்கும் வகையில் மலர் வழிபாடு இடம்பெற்றது.

தொடர்ந்து கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதில் 'பிள்ளைகளை மையப்படுத்திய கல்வியும் பெண்களும்' என்ற தொனிப்பொருளில் கலாசாலை விரிவுரையாளர் பிரபாலினி தனமும், 'வள்ளுவம் தந்த வள்ளுவர்' எனும் பொருளில் தமிழ் சிறப்புநெறி ஆசிரிய மாணவி எம்.ஏ. சமீனாவும், 'வள்ளுவரும் பெண்மையும்' எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலும் உரையாற்றினர். (ச)

# 'புதிய திருப்பம்' நூல் அறிமுகம்

சமூக கலை இலக்கிய நலன்விரும்பிகளின் ஏற்பாட்டில் கொ.பாபுவின் 'புதிய திருப்பம்' கவிதைத் தொகுப்பு அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை 11ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு டேவிற் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் துணை விரிவுரையாளர் சூ.டினேஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சிஶ்ரீகுமரன் தலைமை உரையாற்றவுள்ளார். (ச)

# காணி தொடர்பிலான தெளிவூட்டல் கருத்தரங்கு




ல்லைத்தீவு, மார்ச் 10

ல்லைத்தீவு பிரதேசசெயலக காணிப் நதி உத்தியோகத்தர்களுக்குக் காணி ாடர்பான தெளிவூட்டல் கருத்தரங்கு ல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் ற்றது.

லியல் மற்றும் சமூக அபிவிருத்திக் ன நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாவட்ட ாழில்நுட்பப் பிரிவு உத்தியோகத்தர் பா.மதுசூதன் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

கருத்தரங்கில் மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாவட்ட காணிப்பகுதிக்குப் பொறுப்பான மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன் காணி தொடர்பிலான விளக்கங்களை வழங்கினார். காணி தொடர்பான சட்ட நுணுக்கங்கள் தொடர்பில் சட்டத்தரணி த.வினோதன் கருத்துரைத்தார். (ச-19)

# மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறை

யாழ்ப்பாணம் பழைய மாணவச் சிப்பாய் அமைப்பால் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு பயிற்சிப் பாசறை அண்மையில் இடம்பெற்றது. அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.கஜவதனனின் தலைமையில் இந்தப் பயிற்சிப் பாசறை இடம்பெற்றது.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் ஆரம்பமான நிகழ்வில் மாணவர்களுக்கான தலைமைத்துவம், எதிர்கால வழிகாட்டல், போதை ஒழிப்பு, மாணவர்களின் திறன் விருத்தி, இனங்களுக்கு



இடையேயான சகோதரத்துவம் ஆகிய விடயங்கள் குறித்து வளவாளர்களால் கருத்துரைக்கப்பட்டது. கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் தேசிய படையணியின் 20 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் சகோதர இனத்தை சேர்ந்தச் மாணவர்களும் இந்தப் பாசறையில் பங்குபற்றியிருந்தனர். (ச)

# நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

அதற்கமைய பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமைக்கு முன்பாகத் தமது பெயர், விவரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றத்தினர் அறிவித்துள்ளனர். (ஓ-14,66)


**வேலைவாய்ப்பு**

வடமராட்சி இளைஞர், யுவதிகளுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம். இலங்கையில் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றின் பதவி வெற்றிடங்கள்.

**தகைமை** :- O/L கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

வயது :- 18 - 55

**077 741 9911**

**புலமைப்பரிசில் வகுப்புகள்**
**தரம் 04, 05 இற்கான**

» I.Q Classes (வினாத்தாள் 1 இற்கானது)
» Paper Classes - "யாழ் அறுவடை" மாதிரி வினாத்தாள் முன்னோடிப் பரீட்சைகள்

ஆரம்பம்:- 11.03.2023 (சனி) காலை 6.30

ஆசிரியர் என்.எஸ். தீபன்
Colacity Education Navalar Road, Jaffna
தொடர்பு:- 077 666 0749

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 82 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம்
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா மட்டும்.
- 03 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு:
**076 755 8606**
**074 318 7263,076 436 5814**

**கொழும்பு விலையில் 30% விலை கழிவுடன் யாழ்ப்பாணத்தில் விற்பனை**

- அழகுசாதன அன்பளிப்பு விளையாட்டு பொருட்கள்.
- கவரிங் நகைகள், சோடினை பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்.
- மணிக்கூட்டு வகைகள், கிறீம் வகைகள்.
- பிளாஸ்ரிக் பொருட்கள், பாட்டா வகைகள்.
- தையல் உபகரணங்கள்.
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்.

✔ கொழும்பு விலையில் விற்பனைக்கு.

இல.26/01 ஜிம்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.
077 468 3354
சரவணபவன் பான்சி கவுஸ் உரிமையாளர் தே.கலைதாசன்(கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.